411

OFFICE OF TH... 18 JAN 1919

ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:.

# குரு தோத்திரப்பா.

இது

திருத்துருத்தி-இந்திரபீடம்
ஸ்ரீ கரபாத்திர ஸ்வாமிக ளாதீனம்
ஈசூர் - ஸ்ரீ சச்சிதாநந்த சுவாமிகளவர்களின்
சிஷ்யர்களுள் ஒருவராகிய
ஸ்ரீ நீலமேகஸ்வாமிகளவர்களது
சரணாரவிந்தத்தின் மீது
மேற்படி ஸ்வாமிகள்
சீடர்களி லொருவராகிய
முனுகுபட்டு - முனிசாமியென்னு மியற்பெயருடைய
அருளாநந்த சுவாமிகளவர்களால்
இயற்றப்பட்டு,

சென்னை - கோமளேசுவரன்பேட்டை,
சச்சிதாநந்தம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1919.

411
1.19

147109

உ

# சாற்றுக் கவி.

ஆர்ணி ஜாகிர் - காமக்கூர் - தமிழ்ப்பண்டிதர்

ஸ்ரீமத் மு. சுந்தரமுதலியா ரவர்களியற்றிய

நில மண்டில வாசிரியப்பா.

சீர்நில வும்பொழிற் றிரிவே ணிக்கரை
நீர்நில வளமொடு நித்திய மோங்கும்
மூன்றுல கஞ்சொலு முனுகப் பட்டிற்
றோன்று மடாலயத் தோன்ற லாகிய
திருத்து ருத்தியிற் றிகழிந்த்ர பீடப்
பெருத்த மகிமைப் பெருங்கர பாத்திரச்
சாமியா தீனந் தன்னைச் சார்ந்த
தோமிலா வீசூர்த் தோன்றி வளர்ந்த
சச்சிதா நந்த சாமிக ளடியை
யுச்சிமேற் கொள்ளு முத்தம ராகிய
நீல மேகனெனு நிமலன் பதத்திற்
சீலமே பெருக்குஞ் செய்ய தோத்திரப்பா
மாலையைச் செய்து மகிழ்ந்தணிந் தனனால்
நூலை யாராயு நுண்ணறி வாளன்
பரவிய குலால பரம்பரை வந்தோன்
வரமிகு ஞான வரம்பினி னின்றோன்
முனிசாமி யென்ன முழங்கும் பெயரோன்
இனிதா யடியரை யேத்தும் பெரியோன்
தெருளா ரியனுற் சிறப்புப் பெயர்கொள்
அருளா நந்த வரும்புல வோனே.

463
29415

## சாற்றுக் கவி.

OFFICE OF ... 10 JAN 1919 ... MADRAS
411/1·19

திருவோத்தூர் - திருநாவுக்கரசு மடம்
முத்தமிழ் ரத்னுகரம்
ஸ்ரீமத்-ம. தி. பானுகவி சுவாமிக ளவர்கள்
இயற்றிய

எழுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

பரமனே யனைத்து மெனமறை பகர்ந்த பண்பினை யேற்றவர் பயிலு, முரமுற ஞான நூல்வழி யொழுகு முத்தமக் குணவனு முனுகைத், திருநக ரமர்ந்த நீலமே கப்பேர்ச் சீரிய வாரியன் றனைப், பரவுறு மருளா நந்தன்செய் பாப்போற் பாவலரார்செய்வர் பரிந்தே.

Q2:417 N10

கோவிலூர்
கலாசாலை - உபாத்தியாயரும்
மேற்கண்ட ம. தி. பானுகவி சுவாமிகளின்
சீடர்களி லொருவருமான
ஸ்ரீமத்-கே. விஜயராகவப்பிள்ளை யவர்களியற்றிய

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

கருதரிய வேதாந்தக் கடற்கடந் தெழிற்குரு கழற்றோத்திரக்கரைபட, இருகரம தாகிய விலக்கிய விலக்கண மென்பதானீந்தல் செய்து, மறுமையிம் மைக்கினிய மார்க்கமிஃ தென்றுமே மண்ணுளோர்க் கோர்விருந்தாய்ப், பெருமைபெற வீந்தனன் முனுகநகர் வாழ்கின்ற பேரரு ளாள னன்றே.

ஓம்

தத் சத்

பரப்பிரஹ்மணே நம:.

# குரு தோத்திரப்பா.

## விநாயகர் துதி.

### நேரிசை வெண்பா.

சீராரு ஞானமிகச் சித்திக்குஞ் சின்மயமே
நேராங் குருவடியே நேர்துதிக்கப்—பாராய்
பேரானை முத்திப் பிழம்பான வைந்துகரக்
காரானை மாமுகனே காப்பு.

## தர்ம்மாம்பிகை துதி.

மாநிதிக ளோங்கிவளர் மண்டலமெ லாம்புகழு
மாநிரைகள் சூழ்ந்திடு மாநகராம்—பாநிறையும்
முனுகநகர் முன்னவளா மூதரிய வம்பிகையின்
பனுவல்செயப் பாக்கியமாம் பார்.

## பாயிரம்.

### ஜகத்குரு சங்கராசாரியர் துதி.

### பன்னிருசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்.

திசைமிகுந் திடுபீட மாகியப் பிரமமுந்
திகழ்வாணி பதுமபீடம்
செப்பரிய தாகிய காமகோ டிப்பீடஞ்
சேர்ந்திடுந் தருக்காவலன்,

வசையிலெழிற் பீடமும் வகுத்துலகி லத்வைத
மார்க்கமும் வளர்த்துமற்ற
வண்டகோ டிகளெலா முய்யுமா றுய்த்தவம்
வளர்த்திடுந் தேவதருவே,
இசையியல் நாடகத் தமிழினொடு வேதாந்த
விலக்கிய விலக்கணாதி
எனுங்கடல் நீந்திட வங்கமாங் கேள்வியா
லேகிக்கரை கண்டசீல,
அசைவிலா மனமிகுந் தாநந்த பூர்த்தியா
யைம்புல னவித்தொளிர்ந்த
அதீதமாஞ் செகத்குரு வாதிசங் கரரெனு
மாரியன் றுள்பணிகுவாம்.

## பரமாச்சாரியர் துதி.

### நேரிசை வெண்பா.

தச்சிவமே யெல்லாமாய்த் தானாய்த் தனியுதித்த
அச்சிவமே யிச்சிவமா யாண்டளிக்கு—முச்சுடர்மேல்
உச்சிதமா மாநந்த வோதைக் கடற்பரமாஞ்
சச்சிதா நந்தசிவந் தான்.

## சுப்பராய ஆசாரியர் துதி.

தானேதா னாகுநிலை தானாஞ் சிவபோதத்
தேனே தெவிட்டாத தெள்ளமுதா—மோனநிலை
செப்பரிய தண்டுறையார் சின்மயசொ ரூபநிலைச்
சுப்பரா யன் றுணை.

## குரு வணக்கம்.

என்னை யெனக்களித்தா னென்வடிவே தானானன்
மன்னு மறைமுடிவின் மாசிவமாய்—நின்றொளிரும்
ஞாலமே கம்போல ஞானமழை பெய்யெனது
நீலமே கத்தா ணிணை.

## சொரூப வணக்கம்.

### கலிவிருத்தம்.

விண்ணினுங் காசினி யினினும் பாதலத்
தெண்ணுடை யுயிரினு மின்மை தன்னினும்
கண்ணொளி யாகவே கருதி நின்றொளிர்
புண்யசிற் சோதியாம் பொருளி றைஞ்சுவாம்.

# நூல்.

## குரு தோத்திரப்பா.

### பன்னிருசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

அருளுறும் பொருளாகித் தத்துவனன் னிலையாகி
யானந்த மயமாகியே
அருமறையின் விரிவாகி யரியபல கலையாகி
யரியயனு மானுமாகி,
இருளகலு நிரதிசய வானந்தமா யொளிரு
மின்பமுறு முடிவாகிய
எங்குநிறை நியமமாய் நெறியுமாய்க் குறியுமா
யென்றைக்கு மழியாததாய்,

OF THE ... TRAR OF ...
18 JAN 1919

மருளக லநாதியா யந்தமின் ஞானம்விளை
மார்க்கமாய்த் தெள்ளமுதமாய்
மனதிற்கும் வாக்கிற்கு மெட்டாத தூரமாய்
மாட்சியின் சமீபமாகுந்,
தெருளின்மை யகலாது பொழிமுனுக நகர்மேவுந்
திகழிந்ர பீடமதிலார்
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 1

பாரெலாம் போற்றிடும் பரமநீ யென்னுளம்
பதிவாஞ்ச மாதிதனிலே
பகராரிய வுணர்வொளிய தாணுவாய் நின்றிடும்
பகலெனு மெதார்த்தநிலையே,
நேருலா மெங்கெங்கு மனுதினமு மிடைவிடா
நிறைவெள்ள மாயுணர்த்தும்
நிகரிலாப் பரமார்த்த மிதுவென்ன வெங்குமே
நிறைந்திடுங் குணக்குன்றமே,
போருலாம் பொறிபுலன் பூண்டநாய் கடையற்குப்
புகுமிடங் காட்டியருளப்
புனிதமி லூழ்வினை யொழியவே பாழ்வினை
பொன்றிட மெய்வெளிதரச்,
சீருலாம் பாகுநீர் செறிவயற் சிகறிநதி
சேர்முனுக விந்ரபீடத்
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 2

அறிஞனைப் போலெண்ணிப் பெரியரை யடுக்காம
லாங்கார மேபடைத்திங்
கறிவுறத் தொன்னூ லுரைத்தபடி யேயிருந்
தடிமலர் பெற்றேனிலை,
நெறியுடன் பரிந்துளங் கனிந்துமே பத்திநிலை
நேடியே கடைப்பிடித்து
நில்லாத நாயினே னாயினு மென்றனை
நின்னருள் காட்டாவிடிற்,
குறியுணர்ந் திலகாது செகமதனி லேகளி
கூர்ந்திடுங் கொடியனென்பாற்
கூடிய மகத்துவ மிகுத்ததோர் சகசமாய்க்
குலவுமாஞ் சமாதியருளுஞ்,
செறிபடுந் துடவைசூழ் முனுகநக ரிலகிடுந்
திருமடா லயவதிபதி
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 3

சித்தமூந் திடம்பெற முத்திநிலை யிஃதெனத்
தெளிவுறப் பதமருளிடுந்
திண்மைமிகு பத்தியை யின்னதென் றேகாட்டிச்
சேயன்முன் பரிசுகாட்டி,
அத்துவித முடிவினை விருத்தி ஞானத்தினை
யாய்ந்திட வழிகாட்டியே
யமுதப்பி ழம்பாகி யெங்குநிறை வெள்ளமே
யதீதமாகிய வடிவமே,

முத்தர்க ளவித்தைகெடப் பிறப்பிறப் பாங்தொல்லே
முயன்றிடா திருணீக்கிடும்
மோனமே சைதன்ய ஞானமே தானுகி
முற்றுமுள் ளதுமில்லதாஞ்,
சித்தர்விளை யாடுமா முனுககர ரோங்கிடுந்
திகழின்ர பீடமதில்வாழ்
திகழ்சச்சி தானந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 4

உண்மைநிலே யறியுமா ருணர்விலே னுணர்ந்தோர்க்கு
முடல்பொருள் தந்துமில்லேன்
ஓவியம தாகவே கண்டதுங் கேட்டதும்
ஒவவல மாகிநின்று,
வண்மைபட வேண்டியே தினையளவு நாழிகை
யாரியர்க் கடுமைசெய்யேன்
வாத்சல்ய மானதால் லட்சியத் திற்கணமும்
வைத்திலேன் கரணுதிகள்,
புண்ணுழையு வேலென மலமூன்றும் பொறிபுலன்
போராட்ட மதிற்சிக்கினேன்
பூதபௌ திகமற்றுச் சாந்தநிலே தலைபற்றிப்
போதநிலே தேக்குவிக்கு,
திண்டிறன் முனிகணம் வாழ்முனுக நகர்மேவுஞ்
செப்பரிய வின்ரபீடத்
திகழ்சச்சி தானந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 5

தீயனே னுன்னடியை யனுதினந் தியானிக்கத்
தெளிவது தோன்றுநாளிற்
சினமோடு வஞ்சனை தீராத கொலையாதி
தீர்ந்திடு மார்க்கமுறுமே,
பேயனேன் முழுமனத் தோடுதிரு நீறெனும்
பிரசாத நோக்கமுறிலே
பிடிலாப் பில்லியுஞ் சூனிய மாரணம்
பிறவுமா முச்சாடனம்,
ஆயதோர் பதிவைப்பு வேடணந் தம்பன
மாட்டுவித் திடுதன்முதலா
யருளிலா டாகினி பதிமூன்று ராகாதி
யானவீ டனைதேய்த்திடும்,
தீயதனி னுகுதி பெய்வேள்வி முனுகநகர்
சிரிந்ர பீடமதில்வாழ்
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 6

சிரவணக் கேள்வியா லையமுற் றுந்தேயச்
சிதறடித் திடுவெளியதாஞ்
சித்தமுறு லட்சியத் திற்சிதை யாதுறை
சித்திரப் பொன்மலையதாம்,
கரவிலது மனனமாந் தற்போத வியாபகக்
காட்சியாய்ச் சாட்சியான
கடன்மடை திறந்திடுங் கருணைவெள் ளமதான
கங்குல்பக லற்றஞான,

உரவுபடு நிதித்தியா சனமதிற் பொலிவதா
யோதரிய சைதன்யமாய்
உள்ளபடி யெங்குமே தங்கியே ப்ரதிபலித்
தோங்கிடு மௌனநிலைகாண்,
திரமிகுஞ் சீவனடிகள் கூடிடு முனுகநகர்
செப்பரிய விந்ரபீடத்
திகழ்சச்சி தானந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 7

தத்துவ முடிவதாத் தொண்ணூ றோடாறெனச்
சாற்றுமா றுறையாகிய
தவலுறு முதல்தத்து வாதியா றைந்தது
தங்குறு பூதபேதம்,
உத்தபொறி யைந்தொடு புலனைந்து பூதமைந்
துலவுமிந் திரியமைந்து
உலவுமா கன்மவிட யாதியைந் தொடுகாண
முள்ளநான் கறிவொன் றுமே,
சித்தமா மிரண்டான தத்துவ முப்பது
தெளிவுறு மவையெவையெனின்
திகழ்வளி பத்தொடு நாடிபத் தைந்துசயந்
திடமிகு கோசமைந்தாய்ச்,
சித்தர்விளை யாடியே மங்கல மலர்மழை
தினம்பொழி முனுகநகர்வாழ்
திகழிந்ர பீடசச் சிதானந்த ரடிபரவு
திருநீல மேககுருவே. 8

ஆனந்த யாகிய மூன்றான தத்துவ
மானமுப் பத்தாறதின்
அருவினை யிரண்டொடு ராகமு மிருநான்கோ
டாதார மிருமூன்றதாம்,
தானந்த மாகிய குணதோட வீடணை
தருமல மண்டலாதி
தகையொன்று மூன்றதா யைந்தெனு மவத்தையுந்
தானுணர்த் திடுமௌனியே,
ஞானந் தரும்பர வெளியதா யுணர்வினை
நாட்டிய முத்திமுதலே
நாதாந்த வேதாந்த சித்தாந்த மாகிய
நடுநிலைய தானவடிவே,
தீனம்விளை புனிதர்வாழ் முனுகநகர் மேவிடுந்
திகழிந்ர பீடயோகத்
திகழ்சச்சி தானந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 9

தத்துவ மாம்விரி வொடுக்கமிரு பத்தொன்ப
தாமவையோ தூலமாதி
தணவருஞ் சூக்குமக் காரண மபிமானி
தணிவுபெறு மாஞ்சாட்சியாம்,
சுத்தமிகு தூலமார் தோல்தசை யுதிரமுந்
துணர்நரம் பென்புமச்சை
சூக்கும மிருபதா மவைஞான விந்திரியந்
துலங்குமிரு நாலொன்றதாய்,

முத்தாறு கன்மமும் காரணமு மைந்துடன்
முதுவியான வாயுவைந்தாம்
முதியகா ரணமபி மானியறி வொன்றுமே
முற்றுவித் திடுமுதல்வனீ,
சித்தியுறு பொழிவயல் வாழ்முனுக நகரிந்ர
திண்பீட மதில்யோகியாம்
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 10

அன்பிலே னருளிலே னனுதினமு மன்பொடுநின்
னடியர்திருக் கூட்டமதிலே
ஆசையில் லேன்பாச வடவிதனி லேகால
மகற்றுமிந் நாய்தனக்கிங்,
கின்பமொடு மனதுவைத் தேழைக்கு ஞானநிலை
யெடுத்துரைத் திடவேண்டுமே
ஈடனைக ளற்றுமே திருசியம் வெறுத்துமே
யென்றைக்கு மழியாததாய்,
கன்மன முருக்கியே கண்ணினீர் சொரியவே
களிப்பெனுங் கடன்மூழ்கிடக்
கருதரிய வுள்ளமு நெக்குநெக்கா யுருகக்
காட்டியருண் மௌனநிலையைச்,
சின்மயம தாகிய சிவநேசர் வாழ்ந்திடும்
திகழ்முனுக விந்தாபீடத்
திகழ்சச்சி தாநந்த ரடிபரவு ஞானமிகு
திருநீல மேககுருவே. 11

## அருள்வியந் துரைத்தல்.

### கலிவிருத்தம்.

மாயையின்மய மாகிடுமுல கத்தினின்மரு ணீக்கிடும்
தாயைநேர்பரி பூரணுவருள் தந்திங்கெங்களைக் காத்திடும்
தூயனாந்திரு நீலமேகத் துரியமேநிலை தோய்ந்தவுன்
நேயமாம்பதங் காட்டினாய்நிலைச் சென்னையம்பதி தன்னிலே.

தெய்வமேகுரு வாகியெங்களைத் தேடிவந்தருள் கூர்ந்து வந், துய்யவேதயை செய்துகாத்துய ருண்மைஞான முணர்த் தவென், செய்யதாயொத்து மெய்யையூட்டியே சேட்டையாங் குணம் போக்கிடக், கையனேபதங் காட்டினாயருஞ் சென்னை யம்பதி தன்னிலே. 2

தேகமேபொரு ளென்றுநித்தமு தேங்கிடுமல மாதியாம்
தாகமேயொழித் தின்பஞான மளித்திடற்கருண் மேவிய
பாகமேபெரு முத்தியீந்திடப் பாதமேதந்து காத்திடு
மாகமாம்பதங் காட்டினாயருஞ் சென்னையம்பதி தன்னிலே. 3

கானனீர்நிகர் பெண்டுபிள்ளைகள் காட்சியிற்கலங் குற்றனர்
வானநாட்டிறை யாதிபோகமும் வஞ்சமேவிய நஞ்சமே
தீனனாமெனைத் தீரனாக்கித் தெளிந்திடுந்திர நிலையதை
ஆனவாவெனக் கருளினாயருஞ் சென்னையம்பதி தன்னிலே. 4

சச்சிதாநந்த மோனமேவிய தாணுவாகிய வானவா
உச்சிதாநந்த ஞானமேவிய வோங்கலேயரு ணீங்கிடா
இச்சுதாநந்த போகமேயொளி ராசிலாநீல மேகமே
பச்சமாம் பதங் காட்டினாயுயர் சென்னையம்பதி தன்னிலே. 5

## போற்றி விருத்தம்

சத்தியஞா னனந்த சிவமே போற்றி
சர்வவியா பகமான சுடரே போற்றி
முத்தர்சொ லகத்திலெழு முடிவே போற்றி
மும்மலத்தி னிருளவித்த முதலே போற்றி
சித்தர்தவ ழிந்திரமா பீடம் போற்றி
சிதாகாய நிலைதனக்கோர் தேவே போற்றி
வத்துநிலை முனுகநகர் வாழ்வே போற்றி
வாநீல மேகமெனும் வள்ளல் போற்றி.

Q2:41 N1 142609

## சரணம்.

மந்திரத்தி னுட்பொருளா மதியே சரணம்
மனமொடுவாக் கொன்றான மலரே சரணம்
இந்திரபீடத் தமரு மிறைவா சரணம்
எதிகளுக்கோ ராசான வின்பே சரணம்
அந்திரர்வாழ் சோபான் ரருளே சரணம்
அருள்மழைபெய் முனுகநக ரானே சரணம்
பந்தமொழி திருநீல முகிலே சரணம்
பவமொழிக்குங் குருசரணஞ் சரணந் தானே.

## முடிவு விருத்தம்

பூசையுந் தனதாய்நின்ற பொருள்களும் பூசையேற்கும்
மீசனு மடிமைதானு மேற்றியே தோற்றிவிக்கு
நேசமும் நியதிபெற்ற நிலயமும் நீயேயென்று
வாசனை யகலுமாறு மாமறை முடிவே போற்றி.

## வாழி விருத்தம்.

இந்திர பீடத்தடிக ளிறைதாள் வாழி
இலகுதிரு நீலமுகி லிணைதாள் வாழி
கந்தமிகு கரபாத்ர ரடிகள் வாழி
காதலுறு தத்தாத்ரை கமழ்தாள் வாழி
விந்தைமிகு செங்கமல ரடிகள் வாழி
வேதமுறு மருணா சலன்றாள் வாழி
தந்தைபிறை மேனாம ரடிகள் வாழி
சச்சிதா நந்தாடி யடிகள் வாழி.
திருநீல மேககுரு திருத்தாள் வாழி
திகழுறுயா முனாகநகர் செம்மல் வாழி
கருவினையாம் பவக்கடலை கடந்தோன் வாழி
கதிரொளியாய் வந்தவெங்கள் கதியே வாழி
மறுமையிம்மைக் கினியதொரு மருந்தே வாழி
மௌனநிலை தனிலமரு மறையே வாழி
துரியநிலை கடந்தவருட் குன்றே வாழி
சொல்லருளா னந்தனுறை சிறக்க வாழி

சுயஞ்சோதி யன்றி யொன்றுஞ் சோதித்துங் காணேன்,
சுயஞ்சோதி தானே துணை’’.

குருதோத்திரப்பா
முற்றிற்று.